
Registered as a newspaper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 4 | மட்டக்களப்பு | சித்திரை — 1972 | விலை 30 | இதழ் 4 |
| --- | --- | --- | --- | --- |

# கிறிஸ்துவின் உத்தானத்திற்கு அப்போஸ்தலர்கள் அளித்த சாட்சியம்



கிறிஸ்துநாதருடைய உத்தானத்தின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்துகொள்வதற்கு அதைக் குறித்து அப்போஸ்தலர்கள் அளித்துள்ள சாட்சியத்தை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும். ஆரம்பத்தில் அப்போஸ்தலர்கள் கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதை விசுவசிக்கவில்லை (அரு. 20 அதிகாரம்; லூக் 24: 11-12). இயேசு அவர்களுக்குக் காட்சியளித்தபின் அதை விசுவசித்தார்கள் (லூக் 24 : 36–43; அரு. 20:19-29). இந்த உண்மையின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்து அதைக்குறித்து பலத்த சாட்சியமும் கூறினர்.

இயேசு வானுலகுக்கு எழுந்தருளியபின் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் வருகையை எதிர்பார்த்திருந்தவேளை யூதாஸ் கரியோத்திற்குப் பதிலாக ஒருவரை ''இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாக நம்மோடு சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது'' (அ. ப. 1 : 22) என்று புனித இராயப்பர் கூறினார். பரிசுத்த ஆவியைப் பெற்றபின் புனித இராயப்பர் மக்களுக்கு நிகழ்த்திய முதல் உரையில் பின்வருமாறு கூறியுள்ளார்: ''நீங்கள் திருச்சட்டம் அறியாதவர்களைக்கொண்டு இயேசுவை சிலுவையிலறைந்து கொன்றீர்கள்.... இந்த இயேசுவை கடவுள் உயிர்த்தெழச் செய்தார்; இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்சிகள்'' (அ. ப. 2:23, 32)

பிறவி முடவனைத் தேவாலயத்தில் குணமாக்கியதைத் தொடர்ந்து புனித இராயப்பர் மக்களுக்கு நிகழ்த்திய அருளுரையிலும் அதேவிதமாகவே கூறினர்: ''வாழ்வுக்கு வழிகாட்டும் தலைவரைக் கொன்றீர்கள். ஆனால் கடவுள் அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார். இதற்கு நாங்கள் சாட்சிகள்'' (அ. ப. 3:15). தலைமைச் சங்கத்தின் முன் நிகழ்த்திய உரையிலும் புனித இராயப்பர் கிறிஸ்துவின் உத்தானத்திற்குச் சாட்சியம் அளித்தார்: ''இந்த இயேசுவைத்தான் நீங்கள் சிலுவையில் அறைந்தீர்கள். கடவுளோ அவரை இறந்தோரிடமிருந்து உயிர்ப்பித்தார்.... இவராலன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை'' (அ. ப. 4:10, 12). இவ்வாறு ''அப்போஸ்தலர்கள் மிகுந்த வல்லமையோடு ஆண்டவராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியம் கூறினர்'' (அ. ப. 4:33).

அப்போஸ்தலர்கள், தலைமைச் சங்கத்தால் கைது செய்யப்பட்டபோது அவர்கள் முன் பின்வருமாறு கூறினர்: ''நீங்கள் கழுமரத்தில் ஏற்றிக் கொலை செய்த இயேசுவை நம் முன்னோரின் கடவுள் உயிர்ப்பித்தார். இஸ்ராயேலருக்கு மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பையும் அருளும்படி கடவுள் அவரைத் தலைவராகவும் மீட்பராகவும் தமது

[16ம் பக்கம் பார்க்கவும்]

''திருச்சட்டத்தை அழிக்கவல்ல... நிறைவேற்றவே வந்தேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

## (துணை ஆயர்)

## (32) உறுதிப் பூசுதல் அளிக்கக்கூடியவர்கள்

அப்போஸ்தலர்கள் பெந்தெக்கொஸ்து திருநாளன்று பரிசுத்த ஆவியைப் பெற்றபின் புதிதாக ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு அவரைத் தாங்களே அளித்து வந்தார்கள் என்று *அப்போஸ்தலர் பணி* என்னும் நூல் கூறுகின்றது (அ. ப. 8, 14-17; 19, 6). அப்போஸ்தலர்களைத் தொடர்ந்து கிறிஸ்தவ சபைகளுக்குத் தலைவர்களாயிருந்த ஆயர்கள் பரிசுத்த ஆவியைப் புதுக் கிறிஸ்தவர்களுக்கு அளிக்கும் பணியைத் தொடர்ந்து செய்து வந்தனர். இவ்வாறு முதல் பெந்தெக்கொஸ்து நாளோடு ஒருவித தொடர்பு நிலைநாட்டப் பட்டது.

காலம் செல்லச்செல்ல வளர்ந்த கிறிஸ்தவர்களின் தொகை பெருகிக்கொண்டு வந்தமையாலும், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் வழக்கம் ஏற்பட்டமையாலும், எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் ஆயர்களே பரிசுத்த ஆவியை அளிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதற்கிடையில் பரிசுத்த ஆவியைப் பரிமள தைலத்தைப் பூசுவதால் அளிக்கும் வழமையும் உண்டாயிற்று அப்போஸ்தலருடைய காலத்திலேயே குருக்களாயிருந்த மூப்பர்கள் கைகளை விரித்தல், எண்ணெய்யால் பூசுதல் ஆகிய சடங்குகளில் பங்குபற்றியிருந்தமையால் (அ. ப. 13, 3; யாகப். 5, 14) உறுதிப்பூசுதல் அளிக்க அவர்கட்கு ஆயரால் அதிகாரம் வழங்கப்பட்டது. இவ்வாறு கீழ் நாட்டுத் திருச்சபைகளில் குழந்தைகளுக்கும், புதிதாக மனந்திரும்பியவர்களுக்கும் ஞானஸ்நானத்துடன் உறுதிப்பூசுதலும் சாதாரண குருக்களாலேயே இன்னும் அளிக்கப்பட்டு வருகின்றது.

உரோமன் திருச்சபையில் உறுதிப்பூசுதல் சாதாரணமாய் ஒரு ஆயராலேயே அளிக்கப் பட்டுவந்துள்ளது. ஆனால், பின்வரும் விசேஷ சந்தர்ப்பங்களில் உறுதிப்பூசுதல் அளிக்க குறிக்கப்பட்ட சில குருமாருக்கு இப்போது விசேஷ உத்தரவு சட்டபூர்வமாக அளிக்கப் பட்டுள்ளது.

1. மேற்றிராசனங்களின் அல்லது திருச்சபையின் வேறு பிரிவுகளின் ஆயர் பட்டம் பெறாத ஆளுநர்கள் அல்லது பரிபாலகர்கள், தங்கள் ஆட்சிக் காலத்தில் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் உறுதிப்பூசுதலை அளிக்கலாம்.

2. முதிர்பருவம் அல்லது புத்திவிபரம் அடைந்த ஒரு ஆயத்தக் கிறிஸ்தவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் குருவானவரும், பிற கிறிஸ்தவ சபையில் பெறுமதியுள்ள முறையில் ஞானஸ்நானம் பெற்ற ஒருவரைக் கத்தோலிக்க திருச்சபையில் ஏற்றுக்கொள்ளும் குருவானவரும் அவர்கட்கு உறுதிப்பூசுதலை அளிக்கலாம்.

3. மரண ஆபத்திலிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு, ஆயர் ஒருவர் அங்கு இல்லாத அல்லது வரமுடியாத சந்தர்ப்பத்தில், பங்குக் குருவோ, அவர் அங்கு இல்லாத போது உதவிக்குருவோ, அவர்கள் இருவரும் அங்கு இல்லாதபோது அங்கு சமுகமாயிருக்கும் திருச்சபையால் தடைசெய்யப்படாத எந்த ஒரு குருவானவரோ உறுதிப்பூசுதலை அளிக்கலாம்.

ஒரு உண்மையான தேவையினிமித்தம், உதாரணமாக, உறுதிப்பூசுதல் பெறுவோரின் தொகை அதிகமாயிருந்தால், ஆயர் அல்லது மேற்றிராசனத்தின் அல்லது திருச்சபையின் வேறு பிரிவின் ஆயர்பட்டம் பெறாத ஆளுநர் அல்லது பரிபாலகர் சில பிரதான குருக்களை, அதாவது, மேற்றிராசன முதல்வர், வட்டார முதல்வர், பங்குக்குரு போன்றவர்களை உறுதிப்பூசுதல் அளிப்பதற்குத் தமக்குத் துணைவர்களாய்த் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு துணைபுரியும் குருக்கள், ஆயர், ஆளுநர் அல்லது பரிபாலகரோடு கூட்டுப்பூசை ஒப்புக்கொடுத்து, கைகளை விரிக்கும் சடங்கிலும் பரிமள தைலத்தால் பூசும் சடங்கிலும் பங்குகொள்வர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "தேவ ஆலயம்"

## (1) "இவ் ஆலயத்தை இடித்துவிடுங்கள் மூன்று நாளில் இதை எழுப்புவேன்" (அரு. 2, 19)

கைதியான கிறிஸ்துவை யூதரின் ஆலோசனைச் சங்கத்தின் முன் நிறுத்தினார்கள். "கையாலே கட்டிய இந்த ஆலயத்தை இடித்துவிட்டு மனித கைகள் செய்யாத வேறொன்றை மூன்று நாளில் கட்டுவேன்" என்று இவன் சொல்லக் கேட்டோம். (மாற். 14. 57). இதுதான் அவர் மேலே கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டு. மத்தேயு சிறிது வித்தியாசமாக வரைகிறார்: "இவன் கடவுளின் ஆலயத்தை இடித்து மூன்று நாட்களில் மீளவும் கட்ட என்னால் முடியும் என்றான்" (மத். 26. 61). இந்தக் குற்றச்சாட்டை ஒப்பனைப்படுத்த வந்த சாட்சிகள் ஒத்துவரவில்லை. எனவே, பொய்ச்சாட்சிகள் என்று நற்செய்திநூல் நவில்கின்றது.

இது உண்மையா? கிறிஸ்து இவ்வாறு பேசவில்லையா? நற்செய்தியின் வேறு இடங்களிலே இது பற்றித் தகவல் உண்டு. அதைப் பார்த்தால் பொருளைப் புரிந்து கொள்ள முடியும்.

தேவாலயத்தில் வியாபாரிகளை விரட்டியடித்த சம்பவத்தை இயேசுவின் பகிரங்க சீவியத்தின் முடிவிலல்ல, தொடக்கத்திலேயே வைக்கிறார் புனித அருளப்பர். அந்த அடாத்துச் செயலைக் கண்டு அவிகாயங்கொண்ட யூதர் அவரை அணுகி: "இதைச் செய்ய

### "துரை"

உமக்கதிகாரமென்ன? அதற்கென்ன அடையாளம் கொடுக்கிறீர்கள்?" என்றனர். "இந்த ஆலயத்தை இடித்துவிடுங்கள், நான் மூன்று நாளில் இதை எழுப்புவேன்" (அரு. 2. 19) என்று விடை கொடுத்தார் இயேசு. "இவ்வாலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருடங்கள் எடுத்ததே, நீ இதை மூன்று நாட்களில் கட்டி எழுப்புவாயா?" என்று யூதர் நகைத்தனர். ஆனால் அருளப்பர் அதன் பொருளை விளக்குகிறார்: "அவர் குறிப்பிட்டது அவரது உடலாகிய ஆலயத்தையே" (அரு. 2. 21.). இதையே மாற்குவும் தமது கிறிஸ்தவர்கட்கு விரித்து விபரமாக வரைந்தார்.

கிறிஸ்து சிலுவையிலே தொங்கும் போது வழிப்போக்கர் தலையை அசைத்து "ஆலயத்தை இடித்து மூன்று நாளையில் கட்டுபவனே சிலுவையில் நின்று இறங்கி உன்னையே காப்பாற்றிக்கொள்" என்று அவரைப் பழித்தனர் (மாற். 15. 29). கிறிஸ்துவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட அதே குற்றச்சாட்டே பின்னர் முடியப்பருக்கு எதிராக வருவது கவனத்துக்குரியது (அ. பணி. 6.11): "நசரேத்தூர் இயேசு இவ்விடத்தை அழித்துவிடுவார், மோயீசன் நமக்குக் காட்டிய முறைமைகளை நீக்கிவிடுவார் என்று இவன் சொல்லக் கேட்டோம்" என்றனர் சாட்சிகள் (அ. பணி. 6. 14).

இதனால், இயேசு இவ்விதம் புரட்சிகரமாகப் பேசியிருக்கிறார் என்பது பெறப்படும். அதோடு, யூதர் அவருடைய சொல்லையோ பொருளையோ அவதானிக்கவில்லை என்பதும் அம்பலமாகிறது அவர் சொன்ன வார்த்தைகளை அவர்கள் காதினால் கவனமாகக் கேட்கவுமில்லை, அதன் கருத்தைப் புத்தியினாலே புரிந்துகொள்ளவுமில்லை. கல்லினால் கட்டின கோவிலை அல்ல, தனது உடலான கடவுளின் ஆலயத்தைச் சுட்டியே இயேசு பேசினார். இதுதான் பெரிய பரிதாபம் நிறைந்த பாஷைப் பிரச்சினை. ஒன்று சொல்ல மற்றொன்று கேட்பது, வேறொன்று விளங்குவது. இதே காட்சி இன்றும் எமது கோவில்களிலே நடைபெறுகிறதில்லையா? நிறைய உண்டு.

கிறிஸ்துவின் கரிசனை இடித்து அழிப்பதல்ல. உலக மனிதர் அதிலே சதுரர். ஒன்றைக் கட்டும் போது ஒன்பதை இடிப்பது எமது கெட்டித்தனம். எனவே, கடவுளும் அந்தப் பேதமைக்கு எம்மை விட்டுவிடுகிறார். நாமும் எமது வாடிக்கையான வேடிக்கை

(14ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வேதாகமத்தைப் படிப்போம்

## (2) வேதாகமம் ஒரு புனித நூல் தொகுப்பு.

### அருட்திரு. R S. லோப்பு அடிகள்.

"பெரித்" (Berit) என்ற எபிரேயச் சொல்லுக்கும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பான "ஏற்பாடு" (Testament) என்ற சொல்லுக்குமிடையில், அகன்ற வேறுபாடு உண்டு. "பெரித்" என்ற சொல்லை, "உடன்படிக்கை" (Covenant) என்ற வார்த்தையால் அழைப்பது மிகப் பொருத்தமானது.

வேதாகமத்தில் (வேதம்+ஆகமம்) அடிக்கடி தோன்றும் ஒரு புனிதச்சொல் "பெரித்". கடவுளுக்கும், யூத மக்களுக்குமிடையே அமைந்த நெருங்கிய தொடர்பைக் காட்டுமொரு சொல். கடவுளின் மகா பிரமாணிக்கத்தை யூதர்களின் நினைவிற்குக் கொண்டு வரும் ஒரு புனிதச் சொல்.

உலகம் முழுவதையும் புனிதப்படுத்தும் நோக்குடன் ஆபிரகாமை அழைத்த கடவுள், ஆபிரகாமின் மக்களுடன் நடந்துகொண்ட விதம் மிகமிக விசேசமானது. கடவுள் யூத மக்களுடன் செய்துகொண்ட இந்த அன்பின் உடன்படிக்கையைத்தான் "பெரித்" என்று அழைப்பது.

இப்படியான புனித ஒப்பந்தத்தைத் தாங்கிவரும் புத்தகங்கள் புனிதமானவைகளாகவே இருத்தல் வேண்டும். வேதாகமத்தை ஒரு "புனித புத்தகத் தொகுப்பு நூல்" என்று திருச்சபை அழைக்கின்றது. காரணம்: வேதாகமத்தில் இறைவெளிப்பாடு (Revelation) சரித்திர ரீதியில் அமைந்திருக்கின்றது. இவ் இறை வெளிப்பாட்டு நூல்கள் இறைவனின் விசேச ஏவுதலால் அருளப்பட்டவை. (Because they were written under the divine inspiration)

பழைய உடன்படிக்கைக்குரிய காலத்திற்குரிய புத்தகத் தொகுப்பு (Law, Prophets and Writings) புனிதமானது என்று யூதர் கருதினர். அதை மறைநூல் என்று அழைத்தனர். மேற்கூறிய புத்தகத் தொகுப்பையும், நான்கு சுவிசேசகர்கள் எழுதிய இயேசுவின் நற்செய்தி நூல்களையும் அப்போஸ்தலர்களின் திருமுகங்களையும் ஒன்று திரட்டி, பரிசுத்த வேதாகமம் என்று திருச்சபையின் முதுபெரும் தந்தையர் (Fathers of the Church) அழைத்தார்கள் இதைத் திருச்சபை ஏற்றுக்கொண்டது. இறைவெளிப்பாடு முற்றுப் பெற்று, அர்த்தமுள்ளதாக இருப்பின், **புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டில் ஆழமாக வேரூன்றி இருக்கவேண்டும்.**

திருச்சபையின் முக்கிய அப்போஸ்தலரான புனித இராயப்பரும், தன்னையும் அப்போஸ்தலர் எனக் கூறிக்கொள்ளும் புனித சின்னப்பரும் பரிசுத்த வேதாகமத்தைப்பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தனர் என்பதைக் கீழ்வரும் திருமுகங்களின் மேற்கோள்களிலிருந்து நன்கு அறியலாம்.

"மறை நூலில் உள்ள இறைவாக்கு எதுவும் அவனவன் தரும் விளக்கத்திற்கு உட்படக்கூடியதன்று, என்பதை நீங்கள் முதன் முதல் மனதில் வைக்கவேண்டும். ஏனெனில் இறைவாக்கு ஒருபோதும் மனிதனின் விருப்பத்தால் உண்டானதில்லை. மனிதர் பரிசுத்த ஆவியால் தூண்டப்பட்டு கடவுளின் ஏவுதலால் பேசினர்" (2 இரா. 1, 21)

"மறை நூல், கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தினால் மீட்பிற்கு அழைத்துச் செல்லக்கூடிய ஞானத்தை அளிக்க வல்லது. மறைநூலில் உள்ளதெல்லாம் கடவுளால் ஏவப்பட்டுள்ளது. போதிக்கவும், கண்டிக்கவும், சீர்திருத்தவும், இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வில் மக்களைப் பயிற்றவும் பயன்படும்" (2 தீமோ 3,16). பழைய உடன்படிக்கைக் காலத்திற்குரிய புத்தகத் தொகுப்பையே (Law, Prophets and Writings) இவர்கள் **மறை நூல்** என்று இங்கு குறிப்பிடுகின்றனர். ஆனால், புதிய உடன்படிக்கைக் காலத்திற்குரிய பரிசுத்த நூல்களும் மறை நூலுக்கு உரியவை என்று புனித இராயப்பர் பின்வரும் மேற்கோளில் கூறுகின்றார்: "புரிந்து

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைமகன் இயேசுவும் மனுக்குல மீட்பும்

இயேசுகிறிஸ்து யார் என்று அவரைப் பின்பற்றுபவரை மற்றவர் கேட்பது நியாயமே. ஆகவே, அவர் யார் என்று கிறிஸ்தவர் கொடுக்கும் விளக்கத்தைச் சுருக்கமாக எடுத்துரைக்க முயல்வேன்.

கிறிஸ்தவர்களின் கொள்கைப்படி இப் பிரபஞ்சத்தைக் கடந்து உள்ளது கடவுள் என்னும் பரம்பொருள் ஒன்றே என்பதை எவரும் அறிவர்; எவரும் ஏற்பர். திருவாசகம் சிவனை ஏகன், அநேகன் என்றும், கிறிஸ்தவர் கடவுளை ஏகன், மூவன் எனவும் விளக்குவர். கடவுள், பரம்பொருள் ஒன்றே எனத் திட்டவட்டமாகக் கூறுவதில் கிறிஸ்தவர்களை எவரும் வெல்ல முடியாது. ஆயினும் வாய் கூசாது அவ் ஒரே பரம்பொருளில் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற தமிழ் இலக்கண வேறுபாட்டை ஒப்ப மூவிட வேறுபாடு கோருகின்றனர். அம் மூவிடங்களை மூன்று ஆட்கள் எனவும், அவர்களை முறையே பிதா, சுதன், பரிசுத்த ஆவி எனவும் அழைப்பர். விளக்கம் கேட்டால் கிரேக்கருடைய தத்துவ சாஸ்திரப் பதங்களை எடுத்தாண்டு ஆழ்ந்த

**சுவாமி ஜோசெவ் அ. கருணாகரர்**
புனித நீக்கிலார் கோவில், மிருசுவில்.

தத்துவம் பேசுவர். ஆனால் அவர்களுடைய விசித்திர பதங்களை அகற்றிக் கருத்தைக் கூர்ந்து கவனிக்கும்கால் அவர்கள் கடவுளைச் சச்சிதானந்த அடிப்படையில் விளக்குவது புலனாகும். சத்து, சித்து, ஆனந்தம் என்ற வேறுபாட்டின் அடிப்படையிலேயே அவர்கள் கடவுளைப் பிதா, சுதன், பரிசுத்தஆவி என இட, அல்லது ஆள் வேறுபாடு கொண்டு நோக்குகின்றனர். பரம்பொருள், கடவுள் சிந்தனை அற்ற அறிவில்லாத ஓர் அஃறிணைப் பொருளாகுமா?

கடவுள் என்னும் பரம்பொருளின் உள்ளக்கிடக்கை வெளியாவது, உருப்பெறுவது பரம சிந்தனையால், பரமனின் சிந்தனையால் என்க. ''எனக்கொரு சிந்தனை பிறக்கின்றது'', என்போம். ஆகவே, சிந்தனை பிறக்கும் தன்மையதாய் பேறு — பிறப்பு, பெறுபவன் — பிறவி என்னும் உறவையும் வேறுபாட்டையும் பயக்கும். உண்மை என்னும் உருவைத் தருவதால் கடவுள் ஒரு முனையில் தந்தையுமாய், மறு முனையில் உண்மை உருப்பெற்றுப் பிறப்பதால் மகனுமாக நேருகின்றது. கண்ணுதலான் முருகனை ஈன்றவாறு என்றூர் ஆய்வுத்துறைப் பேரறிஞர் ஹெராஸ் அடிகள். இப்பரம சிந்தனையால் ஆதியனந்தந்தை அரும்பெரும் சோதியாய் உதித்த தன் மகனையும், மகன் தன் தந்தையையும் நோக்கரிய நோக்காய் நோக்கி நிற்கின்றனர். இக் கண்கொள்ளாக் காட்சியின் முடிவு பாசம். ஆதியும் அந்தமும் இல்லானை, முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளான அப்பனை, அரும்பெருஞ் சோதியாக அவனகத்தே உதித்த பரம்சோதியுடன் இணைக்கும் பரம அன்பைப் பாசமாய் நோக்கிப் பரிசுத்த ஆவியென்பர் கிறிஸ்தவர். பரமானந்தப் பழங்கடல் அதுவே என அழகுறக் கூறும் திருவாசகம்.

சுருங்கக் கூறுமிடத்து அப்பன் பரம் பொருள்; மகன் பரம்சோதி; பரம அன்பு, அல்லது பரம ஆனந்தம் பரிசுத்தஆவி.

இப்பரம் சோதியே கடவுளின் ஞானம்; கடவுளின் சிந்தனை. அப்பரம சிந்தனையை எடுத்தியம்புவது கடவுளின் வார்த்தை என்றூர் நாலாம் நற்செய்தி ஆசிரியர் அருளப்பர்.

> **''ஆதியில் வார்த்தை இருந்தது;**
> **அவ் வார்த்தை கடவுளிடம் இருந்தது;**
> **கடவுளாகவே இருந்தது அவ்வார்த்தை''**
> (அருளப்பர் நற்செய்தியின் ஆரம்பம்)

இவ்வார்த்தையே மனிதனாய்ப் பிறந்தது. மரியாய் என்னும் ஒரு கன்னி கர்ப்பமாய் இம்மனிதனைப் பெற்றெடுத்தாள். புதுமையாய்க்கர்ப்பவதியாகியே பெற்றூள் இயேசுவை

[6ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைமகன் இயேசுவும்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

மரியாள். மத்தேயுவும், லூக்காவும் தங்கள் ஏடுகளில் இதற்கு வெளிப்படையான சான்று தருகின்றனர். இவ்வுண்மை கிறிஸ்தவத்துக்கு அத்திவாரக் கல்லாய் அமையும்.

இயேசு சூசையின் மகன் அல்லர். சூசையின் மகனுயின், அவர் எம்மைப் போன்ற மனுப்பிறவியே. அவரையிட்டுக் கிறிஸ்துவ மறையே பிறந்திருக்காது. இதை அறிந்த பாரதி கிறிஸ்தவர்களின் கடவுளை "இயேசுவின் தந்தை" எனப் புதிய ஆத்திசூடி என்ற பாட்டில் திறம்பட எடுத்துரைத்துள்ளார். ஒருவனுக்கு இரு தந்தையர் கிடையா. இயேசுவுக்கு ஒன்றில் கடவுள் தந்தை, அல்லது சூசை தந்தை. கடவுளுக்கு எப்படி மகன் என்று கேட்பார்க்கு மேலே விடையளித்துள்ளேன்.

இயேசு மனுக்குலத்தின் மீட்புக்காக தம் உயிரைச் சிலுவையில் தியாகம் செய்தார். தாம் கடவுளின் மகன் என்பதை இறந்த பின் உயிர்த்தெழுந்து எண்பித்துள்ளார்.

ஒன்றே கடவுள், ஒன்றே மனித குலம் எனில், கடவுளின் ஒரே மகன் அக்குலத்தில் கலந்து கொண்டதும் அவ் இறைமகன் அக்குலத்தை ஒன்றுபடுத்தி வாழவைக்கும் முதல்வன் ஆகிறுன்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – அன்றேல் அனைவர்க்கும் தாழ்வு"

என்ற பாரதியின் பொன் மொழியே எமக்கு மனித சரித்திரத்தில் இயேசுவுக்கு உரிய இடத்தை விளக்கத் தகுந்தது. மனித சந்ததி பல தலைவர்களால் வழி நடத்தப்படும் வரையும் அதற்கு உய்வு இல்லை. மீட்பு இல்லை. அது வாழும் உலகில் நீதி இராது; அமைதி இராது. மனித குலம் ஒன்று பட்டு ஒரு தலைமையில் நடத்தப்படுவதற்குக் கடவுள் தந்த தலையே இந்த இயேசு. உலகத்தின் ஒற்றுமைக்கு உலகத்தின் மையம் ஓர் இடமாய் இருக்க வேண்டும் இந்த உலகின் மையம் வாஷிங்டனு? மொஸ்கோவா? பீக்கிங்கா? இலண்டனு? டோக்கியோவா? என்பதே உலகின் பெரும் கேள்வி! இக்கேள்விக்கு மனித குலம் விடைகாணும்வரை உலகத்தில் ஒற்றுமை ஏற்படாது.

மனித சரித்திரத்தையும், குறிப்பாக யூத மறை, கிறிஸ்தவ மறைகளின் சரித்திரத்தையும் பூமியின் நிலப்பரப்பின் அமைப்பையும் கூர்ந்து கவனிப்பவர் இயேசு பிறந்த நாடு, பலஸ்தீனம்–இன்றைய சிறிய இஸ்ரவேல்–மூன்று மத்திய பாரிய கண்டங்கள் சந்திக்கும் பாலமாக அமைவதை உணரத் தவற மாட்டார்.

அச்சூழலே உலகப் பண்பாட்டின் தொட்டில் என்பர். உலகப் பண்பாட்டின் உச்சியும் அதே சூழலைத் தேடிவரும். சிறிய எருசலேம் உலக சாம்ராஜ்யத்தின் மையமாகும் காலம் தொலைவிலில்லை. இயேசுவின் கதையில் தந்தை கடவுளுக்கு இரு மக்கள். மூத்தவன் யூத இனத்தைக் குறிப்பவன்; இளையவன் மற்ற இனங்கள் யாவையும் குறிப்பவன். இளையவன் ஊதாரியாய்த் திரிந்து வீடு திரும்பியதும், மூத்தவன் வயலில் இருந்து வந்து வீட்டில் நுழையப் பின்தங்கியதையும் அக்கதை உணர்த்தும். அப்படியே கிறிஸ்தவ சமயத்தின் மூலம் யூதர் அல்லாதாரராகிய நாம் ஒன்று சேர்க்கப்படும் இக்காலத்தில் யூதர் இயேசுவுக்கும், கிறிஸ்துவத்துக்கும் புறம்பாயுள்ளனர். ஆனுல், அவர்களும் கடவுளால் மீட்பர் ஒருவர் அனுப்பப்படுவர் என எதிர்பார்க்கின்றனர். கிறிஸ்தவர்களும் இயேசு மக்களை மீட்க மீண்டும் வருவர் என எதிர்பார்க்கின்றனர்.

இந்த இரு எதிர்ப்பார்ப்புகளும் சந்திக்கும் காலம் மனுக்குலத்தினதும், உலகத்தினதும் பண்பாட்டின் உச்சியும் அதன் பொற்காலமுமாக அமையும். இதுவே மனித மீட்பு.

**குறிப்பு:-** இக்கட்டுரையைப் பற்றி உங்கள் கருத்துக்களைத் தெரிவியுங்கள் – ஆசிரியர்

## மூதூர் புனித அந்தோனியார் மங்கையர் மன்ற அங்குரார்ப்பணம்

கடந்த 22–2–72ல் வண. S. அருள் குணஞானம் அடிகளார் தலைமையில் ஞானப் பிரகாசர் மண்டபத்தில் பரிசுத்த ஆவியின் இனிய கீதத்துடன் புதியதோர் மகளிர் மன்றமாக புனித அந்தோனியார் மங்கையர் மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவி:- ச. ஞானகான கோகிலம்குருஸ்.
உப தலைவி:- நி. சந்தான நங்கை
செயலாளர்:- இ. கருணவதி குருஸ்
உப செயலாளர்:- செல்வி. தே. மேரிஅக்னஸ்கொறேரா
பொருளாளர்:- செல்வி. அ. அருள்ஜோதி மிராண்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அப்போஸ்தலரான புனித தோமையார்

## (4) சோழ நாட்டில் புனித தோமையார்.

பின்போடப்பட்டிருந்த நூற்றாண்டு விழா இம்மாதம் 14ம், 15ம், 16ந் தேதிகளில் சென்னையில் கொண்டாடப்படுகின்றது. — ஆசிரியர்

புனித தோமையார் **கலமீனு** அல்லது **மயிலாப்பூர்** என்ற இடத்தில் தேவசாட்சியாக மரித்து அடக்கம் செய்யப்பட்டார் என்று பழங்கால ஏடுகள் கூறுவதால், அவர் சோழ நாட்டிலும் ஞானப்பணி புரிந்தார் என்று நாம் திடமாய் அறிகிறோம். இவ்வுண்மைக்குச் சான்றாக மயிலாப்பூரில் புனித தோமையாரின் கல்லறை இன்றும் உண்டு. ஆனால், அவர் எப்போது சோழ நாட்டிற்கு வந்தார்? எந்தெந்த இடங்களில், எவ்வளவு காலம் திருத்தொண்டாற்றினார்? எத்தனை பேரை மனந்திருப்பினார்? என்ன காரணத்தினால், யாரால், எந்த ஆண்டில் கொல்லப்பட்டார்? என்ற கேள்விகளுக்கு பழங்கால ஏடுகள் திட்டமான தகவல்கள் எதுவும் தமக்குத் தரவில்லை.

**உரோமையின் வேதசாட்சிகள் பட்டியல்** என்ற பழங்கால நூல் புனித தோமையார் இந்தியர்களின் அரசனால் மரணத்தீர்வையிடப்பட்டு டிசம்பர் மாதம் 21ம் நாள் கலமீனாவில் ஈட்டியால் குத்திக்கொல்லப்பட்டார் என்று கூறுகின்றது. **அப்போஸ்தலரான புனித தோமையாரின் பணி** என்ற மற்றொரு பழங்கால நூல் அவர் அவ்வாறு கொல்லப்பட்டதற்கு இராணியையும் இராசகுமாரத்தியையும் மனந்திருப்பியதைக் காரணமாகக் காட்டுகின்றது. ஆனால், கேரள நாட்டிலுள்ள **''புனித தோமையாரின் கிறிஸ்தவர்கள்''** என்ற பழைய கிறிஸ்தவர்களின் பாரம்பரியம் அவருடைய மரணத்திற்குரிய காரணத்தையும் விபரங்களையும் வேறு விதமாகக் கூறுகின்றது. அவர்கள் அப்போஸ்தலர் மட்டில் கூடிய அக்கறை கொண்டிருந்தமையாலும், மயிலாப்பூர் அவர்கள் நாட்டிற்கு அருகாமையிலிருந்தமையாலும், புனித தோமையாருடைய மரணத்தைப்பற்றிய விபரங்களைக் கவனத்தோடு ஆராய்ந்து அறிந்திருப்பர். ஆகவே, அவர்களது கூற்று நம்பத்தகைமையுள்ளது என்று நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அது வருமாறு:

புனித தோமையார் சோழ நாட்டில் திருமறையைப் போதிக்க வந்தபோது இன்றைய சென்னைப் பட்டணத்திற்கு அருகாமையில் ஒரு காளி கோயில் இருந்தது. அந்த இடத்தில் புனித தோமையார் நற் செய்தியைப் போதித்து அநேகரை மனந்திருப்பியதால், அத்தேவதையின் ஆலய வழிபாடுகள் குன்றிப் போயின. அதனால் அக்கோயில் குருக்கள் அப்போஸ்தலர்மேல் கோபங்கொண்டு அவரைக் கொல்லத்திட்டமிட்டனர். சென்னைக்குத் தெற்கேயுள்ள **சின்னமலை** என்ற குன்றிலிருந்த ஒரு குகைக்குப் புனித தோமையார் செபம் செய்யச் செல்வது வழக்கம். இவ்வாறு ஒருநாள் அவர் அக்குகையில் செபம் செய்து கொண்டிருக்கும்வேளை காளிகோயில் குருக்கள் அவரைத் தாக்கினார்கள். அவர் அங்கிருந்து **பெரியமலை** என்ற குன்றுக்குத் தப்பி ஓடவே, அவர்கள் அவரை அங்கு துரத்திச் சென்று ஈட்டியால் குத்திக் கொன்றனர். அந்நாள் கி. பி. 72ம் ஆண்டு ஜூலை 3ம் நாள் ஆகும். இதை அறிந்த புனித தோமையாருடைய சீடர்கள் அவ்விடத்திற்கு வந்து இரத்தந் தோய்ந்து கிடந்த அவருடைய திருவுடலை எடுத்து, இரத்தந்தோய்ந்த மண்ணோடு கடற்கரைக்கு அருகாமையில் நல்லடக்கம் செய்தனர்.

நம் அப்போஸ்தலர் வேதசாட்சியாக மரித்த இடம் முதல் நூற்றாண்டுகளில் **கலமீனு** என்று ஏடுகளில் குறிக்கப்பட்டுள்ளது. மத்திய காலங்களில் அது **மயிலான், மலாப்பு, மோபார், மலேப்பூர்** என்றெல்லாம் அழைக்கப்பட்டுள்ளது. போர்த்துக்கேயர் இந்தியாவுக்கு வந்தபின் அது **மெலியாப்போர்** என்று அழைக்கப்பட்டது. சொல்லை உச்சரிப்பதிலும், எழுதுவதிலும் பல வேறுபாடுகள் இருந்தாலும், மத்திய காலத்திய பெயர்களெல்லாம் ஒரே இடத்தை அதாவது, இன்றைய மயிலாப்பூரைத்தான் குறிக்கின்றன என்பதில் ஐயமில்லை.

பண்டைக்காலத்தில் மயிலாப்பூர் ஒரு பிரபல்லியம் வாய்ந்த நகரமாய் இருந்த போதிலும் புனித தோமையார் வேதசாட்சியாய் இறந்த இடத்தை முதல் நூற்றாண்டு

[11ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மறக்கமுடியுமா?

## அருள்திரு. ஜோண் பீற்றர் அடிகள்.

பரமனின் கைவண்ணங்கொண்டு இலங்கும் இப்புவியில் பல்லாயிரம் பழங்கதைகளும், காவியங்களும், நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ளன. அவை அனைவற்றையும் நாம் மறக்கமுடியுமா? மறந்து விடக்கூடாததும் வாழ்நாளில் கடைப்பிடிக்கக் கூடியதுமான செயல்கள் எத்தனையோ எத்தனை; அதில் ஒன்றை இங்கு நினைவூட்டுகிறோம்.

திருச்சபையின் பண்டைய பழக்க வழக்கங்களுள் மந்திரிக்கப்பட்ட நீரை தீர்த்தம் என்னும் சிறப்புப் பெயருடன் விசுவாசிகள் அனைவரும் கையாளுவதும் ஒன்றாகும். பரிசுத்த வாரத்தின் பெரிய சனிக்கிழமை இரவில் மரித்தோரினின்று உயிர்த்த இயேசுவின் நினைவைக் கொண்டாடி அப்போது மந்திரிக்கப்படும் நீரை (தீர்த்தத்தை) விசுவாசிகள் அனைவரும் பயபக்தியுடன் தங்கள் இல்லங்களுக்குக் கொண்டு சென்று தங்கள் இல்லங்களையும் மந்திரிப்பார்கள். இன்னும் நோயினால் வருந்துபவர்களை அதே மந்திரித்த நீரைக் கொண்டு தெளித்து ஆசீர்வதிப்பார்கள். அவர்களின் இச்செயல்களில் அவர்களது பூரண விசுவாசத்தின் சாயலைக் காணமுடிந்தது. மேலும் தங்கள் அன்றாட வேலைகளைச் செய்யு முன்னும் பின்னும் அவர்கள் தீர்த்தத்தைத் தொட்டுச் சிலுவை வரைந்த பின்னரே செய்து வந்தார்கள்.

தேவாலயம் செல்லும் போதும் ஆலயத்திலிருந்து வெளியே வரும்போதும் ஆலய வாயிலில் வைக்கப்பட்டிருக்கும் தொட்டியிலுள்ள தீர்த்தத்தைத் தொட்டுச் சிலுவை அடையாளம் வரைந்து செல்வார்கள்.

இவ்வளவு சிறப்பான இச் செயல்கள் நாளடைவில் அருகிவருவதைக் காணும்போது மிகமிக வருந்த வேண்டியதாயிருக்கின்றது. இச்சிறு செயலைக்கூட உதாசீனம் செய்யும் இக்காலத்து மக்களைக் காணுந்தோறும் முற்கால மக்களின் இவ்விசுவாசச் செயலை நினைவூட்ட வேண்டுமென்பதே எம் விருப்பம்.

முற்கால மக்கள் தீர்த்தத்தைத் தொட்டு சிலுவை அடையாளம் வரையும்போது செபித்துவந்த செபத்தையும் இங்கு தருகிறோம். அதைப் படிக்கும் விசுவாசிகள் அதை மனதில் பதித்துச் செயல்பட வேண்டுமென்பதே எம் ஆசை.

### செபம்

இறைவா, இத்தீர்த்தத்தின் வழியாக உமது திருக்குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் இரத்தத்தைக் கொண்டு, என் ஆன்மாவைக் கழுவி, என் பாவங்களைப் பொறுத்து பசாசின் தந்திரங்களையெல்லாம் விலக்கி, உம்முடைய ஆசீரை அடியேனுக்குத் தந்தருளும்: ஆமென். ★

## பதுளை மகளிர் கருத்தரங்கம்

மாசித் திங்கள் 27–28ந் திகதிகளில் பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தில் வித்தியாலயத்தை விட்டு நீங்கிய இளம் மாணவிகளுக்கென பதுளை கார்மேல் சபை கன்னியர்களால் முதன் முறையாக ஒரு கருத்தரங்கம் நடாத்தப் பெற்றது. இதில் 14–20 வயதினர் பங்கு பற்றினர். வண பிதா பேட்டி பாத்லட் கருத்தரங்கத்திற்கு தலைமை வகித்தார் இரு பெண் வைத்தியர், ஆசிரியர்கள் உரைகள் நிகழ்த்தி எமது அறியாமையை நீக்கியதற்கு நன்றி கூறுகின்றோம் இன்னும் தாயும் சேயும், நவீன சாறியணிதல், நவீன தலையலங்காரம் என்பன செய்முறையில் செய்துக் காட்டப்பட்டன. இவ்வித கருத்தரங்கங்கள் ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து நடைபெறுமென எதிர்பார்க்கின்றோம். இதில் 2 கத்தோலிக்கர், 3 கிறிஸ்தவர்கள், 27 இஸ்லாமியர், 42 இந்துக்கள் கலந்து கொண்டனர். எம்மை மகிழ்வித்த அனைவருக்கும், பங்கு பற்றிய அனைவர் பெயராலும் நன்றி கூறுகின்றேன்.

தெரேஸ் விக்டோரியா,
பதுளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# துறந்தவள் முற்றும் துறந்தாள்

அ. அனஸ்டின் பத்திநாதன்,
திருகோணமலை.

அன்று ஞாயிற்றுக்கிழமை; பூசை முடிந்து வந்ததும் வராததுமாக வீட்டில் இவ்வளவு பெரிய பேரிடி தனக்குக் காத்திருக்கு மென்று மேரி சற்றும் நினைக்கவில்லை. பூசை முடிந்து வீட்டிற்குத் திரும்பியதும், மேரியின் தாய் லில்லி, ''மேரி உனக்கு ஒரு உயர்ந்த குடும்பத்திலிருந்து கல்யாணம் பேசி வந்திருக்கிறது. நல்ல பணக்காரக் குடும்பம். நீ சம்மதித்தால் உடனே திருமணத்தை நடத்தி விடலாம்'' என்று மேரியின் கல்யாணப் பேச்சைத் தொடங்கினுள்.

திருமணம் என்றதுமே மேரிக்கு விளக்கெண்ணை குடித்ததுமாதிரி இருந்தது. மகளின் வாயிலிருந்து என்ன வார்த்தை உதிருமோ, என்று ஆவலுடன் அவளின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் லில்லி. அதிக நேர மௌனத்திற்குப்பின் ''அம்மா, எனக்குக் கல்யாணம் செய்யவே விருப்பமில்லை'' என்று தாயைப் பார்க்காமல் வேறெங்கோ வெறித்துப் பார்த்தபடி மேரி கூறினுள்.

எதையோ எதிர்பார்த்துக் காத்திருந்த லில்லிக்கு மேரியின் இந்தப் பதில் தூக்கி வாரிப் போட்டது. ''என்னது? திருமணம் செய்ய விருப்பமில்லையா? கல்யாணம் கட்டாமல் வாழ்நாள் முழுவதும் கன்னியாகவா வாழப்போகிறுய்?'' என்று கோபத்துடன் கேட்டாள்.

நீண்ட காலமாகத் தன் மனதில் வித்திட்டு வளர்ந்து பெரும் விருட்சமாக விளங்கும் ஆசையை ஒரு கணம் நன்ருகச் சிந்தித்த மேரி, ''ஆம் அம்மா; நான் நீங்கள் சொன்னமாதிரி கன்னியாகவே வாழப் போகிறேன். ஆனுல்........ வீட்டிலல்ல; கன்னியர் மடத்தில்''.

இதைக் கேட்டதும் லில்லிக்கு விஷயம் ஓரளவு விளங்கியது. ஆசையாய் தான் வளர்த்த மகள் போயும் போயும் இந்த வழியையா நாடவேண்டும். திக்பிரமை பிடித்தவள் போல் உயிரடங்கிய ஓவியம் போல இருந்தாள். பின் ஒருவாறு தன்னைச் சரிப்படுத்திக்கொண்டு ''என்ன.... என்ன சொன்ஞய்? கன்னியர் மடத்தில் சேரப்போகிருயா?'' என்று மகளை முறைத்துப் பார்த்தவாறே கேட்டாள்.

''ஆமம்மா, நான் கன்னியர் மடத்தில் சேர்ந்து கடவுளுக்குத் தொண்டு செய்யப் போகிறேன்'' என்று நிதானமாகக் கூறினுள் மேரி.

லில்லிக்கு ஆத்திரத்தால் முகம் சிவந்து உதடுகள் துடிதுடித்தன. ''ஏன்டி உனக்குச் சித்தம் கலங்கிவிட்டதா? அல்லது படித்து மூளை கூழாகிவிட்டதா? கல்யாணம் முடித்துப் பேரப்பிள்ளையைக் காணக் காத்திருக்கும் தாய்க்கு மகள் தரும் பரிசு இதுதானுடி? உனக்கு என்னடி குறை? நல்ல வகை வகையான ஆடைகள்; கழுத்து நிறைய நகைகள்; செலவு செய்யப் பணம். இதையெல்லாம் உதறிவிட்டு, கூந்தலையும் மொட்டையடித்து வெள்ளை உடுப்பையும் மாட்டிக்கொண்டு பெரிய செபமாலையும் காவிக்கொண்டு மடத்திலே அடைஞ்சு கிடப்பதில் என்னடி இன்பம் இருக்கு?'' என்று படபடவென்று பொரிந்து தள்ளினுள் லில்லி. இன்றும் சமுதாயத்தில் நிலவும் இந்த அறியாமையைக் கண்டு வேதனைப்பட்ட மேரி தாயாரின் படபடப்பையும் ஆவேசத்தையும் கண்டு மிரளவில்லை. ''அம்மா பிறர் கவனத்தை ஈர்க்கும் ஆடைகளும் உடலை அலங்கரிக்கும் நகைகளும் பணமும் இவ்வுலகின் நிரந்தரமற்ற செல்வங்கள்; இவைகள்தானம்மா இவ்வுலக மாயைகள். மனிதன் கடவுளிடம் செல்லும் பாதையைத் தடை செய்யும் பெரும் திரையாக அமைந்திருப்பது இவ்வுலகச் செல்வங்கள் தான். இவற்ருல் கிடைக்கும் இன்பம் சிறிது காலமே தங்கும். ஆனுல் கடவுளின் போதனையை எல்லா இடங்களிலும் போதித்து வசதியற்ற வறியவர்களுக்கு உதவி செய்வதிலும், நோயாளர்களைப் பராமரிப்பதிலும் தானம்மா உண்மையான இன்பம் அடங்கி

[10ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## துறந்தவள் முற்றும்...

[9ம் பக்கத் தொடர்ச்சி]

யுள்ளது. இவ்வுலகில் நாம் வாழும்போது செய்யவேண்டிய முக்கிய கடமைகள் இவை தானம்மா",என்று விடாப்பிடியாகக் கூறினாள்.

தன் சொல்லுக்கு எதிர் வாதமிட்டுத் தத்துவம் பேசும் மகள்மீது லில்லிக்கு வந்த கோபம் ஒரு விநாடி வெறியாக மாறியது. "என்னடி எனக்கா கடவுளைப்பற்றிப் போதிக்கிறாய்? நான் சொல்கிறபடிதான் நீ நடக்க வேண்டும். உன் முடிவை மாற்றிக்கொள். நான் உன்னை மடத்திற்குப் போகவிடமாட்டேன். இப்பொழுதே உனக்கு நான் சொன்ன இடத்தில் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன் பார்" என்று கூறி புயலென வீட்டை விட்டு வெளியேறினாள் லில்லி.

இதுவரை, தாய்க்கும் மகளுக்கும் நடந்த விவாதத்தில் குறுக்கிட விரும்பாமல் அடுத்த அறையில் இருந்து எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார் மேரியின் தந்தை பீற்றர். பீற்றர் கடவுள் பக்தி நிறைந்தவர். நல்ல குணம் படைத்தவர். எதையும் சிந்தித்துச் செயலாற்றுபவர்.

தாய் வெளியே சென்றதும் மேரி நேராகத் தந்தையின் அறையினுள் சென்றாள். தனது மகளின் 'இரண்டும் கெட்டான்' நிலையைக் கண்டு பரிதாபப்பட்டார் தந்தை. "அப்பா, நாங்கள் பேசியதை நீங்கள் கேட்டுக்கொண்டுதானே இருந்தீர்கள்? நீங்கள் எனது முடிவிற்கு என்னப்பா சொல்கிறீர்கள்" என்று தந்தையின் முகத்தைப் பார்த்து ஏக்கத்துடன் கேட்டாள் மேரி. இக்கட்டான கேள்வி. மகளின் முடிவை நினைத்துப் பீற்றர் ஒரு கணம் தயங்கினார். மகள் பாசம் அவரை விலங்கிட வைத்தது ஆனால், அவள் அந்தப் பாசம், உறவு எல்லாவற்றையும் உதறித் தள்ளி விட்டு அல்லவா போகப்போகிறாள்? நேரம் சென்று கொண்டிருந்தது. "மேரி உன் எதிர்கால வாழ்வைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். எனது மகளாகிய உனக்கு அப்படியொரு பாக்கியம் கிடைக்க நான் என்ன தவம் செய்தேனோ தெரியவில்லை.... ஆனால்.... உன் தாயின் போக்குத்தான் சரியில்லை", என்று விரக்தியுடன் கூறினார்.

"அம்மாவைப் பற்றிக் கவலையில்லையப்பா. இந்தக் குடும்பத்தின் தலைவராகிய உங்களின் ஆசியும் உதவியும் இருந்தால் நான் எனது இலட்சியத்தை அடைய முடியும், அப்பா" என்று இரங்கும் பாவனையில் கூறினாள். "மேரி நீ சொல்வதும் சரிதான். ஆனால் உன் அம்மா உனக்குக் கல்யாண ஏற்பாடு செய்து விட்டு வந்தால் என்ன செய்வது மகளே?" மேரிக்கு முன்னரே தீட்டியிருந்த திட்டம் நினைவிற்கு வந்தது. "அப்பா, இன்று காலை நான் பூசைக்குப் போகும் போது மடத்துப் பெரிய தாயார், 'முடிந்தால் இன்று மாலைக்குள் என்னை அங்கு வரும்படி' கூறினார். அப்பா இதுதான் சமயம், அம்மா வருமுன் என்னைக் கன்னியர் மடத்தில் சேர்த்து விடுங்கள் அப்பா", என்று காலில் மின்னல் கொடி போல் துவண்டு விழுந்தாள்.

சற்றும் எதிர்பாராத இந்த முடிவைக் கேட்ட பீற்றரே ஒரு கணம் அதிர்ந்து விட்டார். மகளின் மன உறுதியையும், இறைப் பற்றையும் எண்ணி வியந்தார். அவளது மனதை மேலும் புண்படுத்த அவர் விரும்பவில்லை. லில்லி வருமுன்னே மேரியைக் கொண்டுபோய் கன்னியர் மடத்தில் சேர்த்து விட்டார்.

காலமும் நேரமும் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. மேரி வீட்டை விட்டுச் சென்று பத்து வருடங்கள் பறந்தோடி விட்டன. மேரியின் பெற்றோரின் குடும்பத்திலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பீற்றர் மனைவியை அழைத்துக்கொண்டு தனது சொந்த ஊரான கண்டியில் அதிக வசதியற்ற ஒரு கிராமத்தில் அமைதியாக வாழ்ந்து வந்தார்.

அன்று போயா தினம் பீற்றர் வீட்டின் முன் கூடத்திலிருந்து அன்றைய தினசரிப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார். லில்லி சமயலறையில் ஏதோ அலுவலில் ஈடுபட்டிருந்தாள். இந்த அமைதியான வேளையில் திடீரென "ஐயோ.... ஐயோ...." என்ற அவல ஒலி பத்திரிகை படித்துக் கொண்டிருந்த பீற்றரை சமயலறைக்குள் விரைவாக ஓடச்செய்தது. அங்கு.... லில்லி தன் ஆடையில் பிடித்த நெருப்பை அணைக்கப் போராடிக் கொண்டிருந்தாள். பீற்றரும் சேர்ந்து அவளுடைய ஆடையில் எரிந்த நெருப்பை பெருமுயற்சியோடு ஒரு விநாடியில் அணைத்தார். ஆயினும் லில்லியின் கால்களில் பலமான எரிகாயங்கள் ஏற்பட்டு அவள் வேதனையில் துடித்துக்கொண்டிருந்தாள்.

அதிக வசதியற்ற அக்கிராமத்தில் நவீன வைத்திய வசதிகளோ முற்றாக இல்லை. யாரோ ஒரு வைத்தியர் சொந்தமாக ஒரு

[11ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அப்போஸ்தலரான...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

களில் ஏன் **கலமீனு** என்று அழைத்தார்கள் என்பதைச் சற்று ஆராய்தல் நன்றாகும். புனித தோமையார் கொல்லப்பட்ட இடத்திற்கு முதலில் எந்த ஒரு பெயரும் இல்லாமல் இருந்திருக்க வேண்டும். அது அப்போது முக்கியத்துவம் வாய்ந்து விளங்கிய மயிலாப்பூரின் வெளிப்புறப் பகுதியாகவே கருதப்பட்டிருக்கவேண்டும். நாளடைவில் அப்போஸ்தலருடைய கல்லறையையும் அவர் இறந்த இடத்தையும் தரிசிக்க வெளிநாடுகளிலிருந்து திருயாத்திரிகர்கள் வரத்தொடங்கினர். புனித தோமையாரோடு அதிக தொடர்பு கொண்டிருந்த சீரியா திருச்சபையினர் அப்போஸ்தலர் இறந்த இடத்தைத் தரிசித்துவிட்டுத் தம் சொந்தநாடு திரும்பிய போது அந்த இடத்தை நினைவில் வைத்திருக்கவும், அதைப் பிறருக்கு அறிவிக்கவும், அது ஒரு சிறுமலையாக இருந்தமையால், அதைத் தங்கள் சீரியாக்கு மொழியில் **''கல்மோனு''** என்று அழைத்திருக்கவேண்டும். **''கல்மா''** என்றால் சீரியாக்கு மொழியில் **பாறைக்குன்று** அல்லது **கடின மண் குன்று** எனப்பொருள்படும். 'ஒனு' என்ற உருபு சேர்க்கப்படும் போது, அது **சிறிய குன்று** ஆகின்றது. இவ்விதம், 'கல்மோனு' என்ற சொல்தான் நாளடைவில் கலமீனு என மாற்றமடைந்தது. சீரியர்கள் கொடுத்த இப்பெயரை **உரோமையின் வேதசாட்சிகள் பட்டியலும்** ஏற்றுக் கொண்டது.

சீரியாக்கு மொழியில் எழுதப்பெற்ற **''அப்போஸ்தலரான புனித தோமையாரின் பணி''** என்ற பழங்கால நூல் எத்தனையோ இடங்களைப் பெயர்சொல்லி அறிவிக்கும் போது, அவர் இறந்த இடத்தின் பெயரை மட்டும் அறிவியாமல் விட்டது வியப்பாய் இருக்கிறது. ஆனால், அவர் **''நகருக்கு வெளியே ஒரு மலைமேல்''** கொல்லப்பட்டார் என்று கூறப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. **''கல்மோனு''** என்பதை சீரியா திருச்சபைத் திருயாத்திரிகர்கள் ஒரு இடத்தின் பெயராகக் கொள்ளாமல் இருந்ததால்தான், அதை ''ஒருமலை'' என்று மொழி பெயர்த்தனர் போலும். இன்றுகூட நம் அப்போஸ்தலர் இறந்த இடம் **''பெரியமலை''** என்று தமிழில் வழங்கி வருவது கவனிக்கத்தக்கது. அருகிலுள்ள **''சின்னமலையில்''** இருந்து அதை வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே அதற்கு ''பெரிய'' என்ற அடைமொழியை மக்கள் கொடுத்திருக்க வேண்டும்.

புனித தோமையார் மயிலாப்பூரில்தான் அடக்கம் செய்யப்பட்டார் என்பதற்கு ஓர் ஆணித்தரமான ஆதாரம், கேரளத்தில் வாழும் **''புனிததோமையாரின் கிறிஸ்தவர்கள்''** இத்தனை நூற்றாண்டுகளாக மயிலாப்பூருக்கு வந்து புனித தோமையாரின் கல்லறைக்கு வணக்கம் செலுத்திவிட்டுப் போவதாகும். தங்கள் சொந்த நாட்டில் புனித தோமையார் திருப்பணி புரிந்தார் எனப் பெருமைகொள்ளும் இக் கிறிஸ்தவர்கள், தம் அப்போஸ்தலர் தம் நாட்டிற்குத் தூரத்திலுள்ள மயிலாப்பூரில் மரித்து அடக்கம் செய்யப்பட்டார் என்பது உண்மையாய் இருந்திராவிட்டால், அதை ஒரு போதுமே ஏற்றிருக்க மாட்டார்கள்.

(வளரும்)

## துறந்தவள் முற்றும்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையை அங்கு நடத்தி வந்தார். அதுவும் அன்று போயா தினமாகையால் மூடப்பட்டு இருந்தது. இதற்குள் வில்லியின் அலறலைக் கேட்டு அக்கம் பக்கத்திலிருந்து ஓடிவந்த அயலவர்களில் ஒருவன் அக்கிராமத்தின் எல்லையில் கிறிஸ்தவ கன்னியர்கள் பரிபாலித்துவரும் ஒரு வைத்தியசாலையைஅறிமுகப்படுத்த, வில்லியை உடனடியாக ஒரு காரில் அந்த வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார் பீற்றர். அங்கு வில்லிக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது

வில்லியின் கால்களுக்கு மிக அவசரமாக மருந்து போட்டுக்கொண்டிருந்த ஒரு கன்னியாஸ்திரி, வில்லியின் தாங்க முடியாத முனகல் ஒலியைக் கேட்டு, தற்செயலாக அவள் முகத்தைப் பார்த்தாள். அதற்குள் வில்லியும் காயங்களின் எரிவைத் தாங்க முடியாமல் முதுகைச் சுருட்டி வளைத்துத் தன் கால்களை நோக்கினாள். அங்கு தன் கால்களுக்கு அருகில் அமர்ந்து தன்னையே பரிதாபத்துடன் பார்க்கும் அந்த உருவத்தைக் கண்டு ''ஆ! மேரி.... மேரி.... என்மகளே'' என்றழைத்தவாறே படுக்கையில் இருந்து எழ முயன்றாள். ஆனால் அவளால் எழமுடியவில்லை. தன் குற்றத்தை உணர்ந்தவள் போல் குலுங்கிக் குலுங்கி அழுதாள். ஆனால் மேரி அழவில்லை. உலக கவலைகளில் இருந்தும், குடும்ப பாசங்களில் இருந்தும் விடுபட்டுக் கடவுளுடன் உறவாடிப் பழகிய அந்த உள்ளம் கலங்காமல் தன் கடமையைச் செய்துகொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

மேல் வகுப்பு மாணவர்களுக்கென 'தொண்டன்' பத்திரிகையில் ஒரு பகுதியை ஒதுக்கி, அப்பகுதியில் அவர்களின் சமய பரீட்சைக்குத் தேவையான அறிவை ஊட்டி, பின் வினுக்களைக் கொடுத்து அவற்றிற்குத் திறமையாக விடையளிக்கும் முதல் மூன்று மாணவருக்கும் பரிசுகள் அளிப்பதெனவும் இப்பரிசுகளை ஒவ்வொரு பிராந்தியமும் கொடுக்குமெனவும், 19-12-71ல் நடைபெற்ற திருகோணமலை — மட்டக்களப்பு மேற்றிராசன ஐக்கிய சங்கத்தின் ஆளுங்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இப்பாடங்களையும் போட்டிகளையும் நடாத்த ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. இதில் அருள்திரு றெக்ஸ் செபமாலை அடிகள், திருவாளர்கள் எம். இம்மனுவேல், எஸ். சவரிமுத்து ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். —ஆசிரியர்.

## மறைக்கல்விப் போட்டி - 1.

விடை அனுப்பவேண்டிய கடைசித் திகதி:
**1-5-72.**

***விதிகள்:-***

1. க. பொ. த. (சாதாரண) தரத்திற் கற்கும் மாணவர்கள் மாத்திரம் கலந்து கொள்ளலாம்.

2. ஒருவர் ஒரு விடைப்பத்திரம் மாத்திரந்தான் அனுப்பலாம்.

3. விடைப்பத்திரத்துடன் கீழே தரப்பட்டுள்ள 'கூப்பனையும்' நிரப்பிச் சேர்த்தனுப்பவேண்டும்.

4. விடைகள் தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும்.

5. விடைகள் மாணவரின் சொந்தக் கையெழுத்தாயிருக்கவேண்டும்.

6. போட்டி சம்பந்தமாய் பத்திரிகாசிரியருடன் எவ்வித கடிதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது.

7. விடைகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் போட்டிக் குழுவினரின் தீர்ப்பே முடிவானதாகும்.

8. பரிசு பெற்றவர்களின் பெயர்கள் 'தொண்டன்' பத்திரிகையில் வெளியிடப்படும்.

## வினுக்கள்

*குறிப்பு:— போட்டி வினுக்கள் இரண்டு பாகங்களாகும்: பாகம் I கட்டுரை. பாகம் II வினுக்களுக்கு விடையெழுதுதல்.*

### பாகம் I

பின்வரும் விஷயங்களுள் ஒன்றைப் பற்றி 150 சொற்களுக்குக் குறையாமலும் 200 சொற்களுக்குக் கூடாமலும் ஒரு கட்டுரை வரைக:

1. இயேசுவும் பசாசின் சோதனையும்.
2. இயேசுவின் உத்தானமும் கிறீஸ்துவ விசுவாசமும்.
3. இறைவனும் இரக்கமும்.

### பாகம் II

பின்வரும் வினுக்களுக்குத் தெளிவாகவும் சுருக்கமாகவும் விடை தருக:

1. புனித லூக்காசை நற்செய்தி நூலை எழுதத்தூண்டிய மூன்று பிரதான நோக்கங்களைத் தருக.

2. பின்வரும் வசனங்களொன்றின் கருத்தை தனித்தனி ஐந்து வசனங்களுக்குள் விளக்குக.

(i) ''ஏனெனில் தாழ்நிலை நின்ற அடிமையைக் கடைக்கண் நோக்கினுர்; இதோ இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுடையாள் எனப்போற்றுமே''

[13ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவர் மன்றம்...

[12ம் பக்கத் தொடர்ச்சி]

(ii) ''இதோ இப்பாலன் இஸ்ராயேல் மக்கள் பலருக்கு வீழ்ச்சியாகவோ, எழுச்சியாகவோ, அமைந்துள்ளான்; எதிர்க்கப்படும் அறிகுறியாக இருப்பான்''

3. பின்வருவனவற்றிற்குச் சந்தர்ப்பங் கூறுக:

(i) ''மக்களுக்குள் எனக்கிருந்த இழிவைப் போக்க ஆண்டவர் என்னைக் கடைக்கண் நோக்கி இந்நாளில் இவ்வாறு செய்தருளினார்''

(ii) நீயோ பாலனே உன்னதரின் வாக்குரைப்பவன் எனப்படுவாய். பாவமன்னிப்பில் உள்ளதாகிய மீட்பை அவர் தம் மக்களுக்கு அறிவித்து, ஆண்டவருடைய வழிகளை அமைக்க அவர் முன்னே செல்வாய்''.

(iii) ''நம் முன்னோருக்கு அவர் சொன்னது போலவே ஆபிரகாமுக்கும் அவர் வழிவந்தோருக்கும் என்றென்றும் இரக்கங் காட்ட நினைவு கூர்ந்து தம்மடியானாகிய இஸ்ரேயலை ஆதரித்தார்''

---

விடைப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பும் பகுதி.

**மறைக்கல்விப் போட்டி – 1**

*(விடை அனுப்பவேண்டிய கடைசித் திகதி 1–5–72)*

மாணவன்/மாணவி பெயர்:....................

..................................................................

பாடசாலையின் பெயரும் முகவரியும்:........

..................................................................

..................................................................

..................................................
மாணவன்/மாணவியின் கையொப்பம்

..................................................
தலைமை ஆசிரியர்/தலைவர் கையொப்பம்

---

விடைப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி:

அருள் திரு றெக்ஸ் செபமாலை அடிகள்
ஆயர் இல்லம்,
மட்டக்களப்பு.

## கிறிஸ்தவ போதக வழிகாட்டி

**32ம் பாடம்: நம்பிக்கை**

இப்பாடம் க. தி. வி. 66ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார் விடைகள்:**

1. நமது நம்பிக்கை நிறைவேறும் என்பதற்கு நிச்சயமுள்ள உத்தரவாதியாய் இருப்பவர் இயேசுகிறிஸ்துநாதர்.

2. விண்ணக செல்வங்களுக்கு அடுத்த படியாக, கடவுள் நமக்கு இவ்வுலகத்திலேயே நமது பாவங்களுக்கு மன்னிப்பளித்து நமது அருளையும் தருவார் என நம்பலாம்.

3. விண்ணக நன்மைகளை கடவுளிடமிருந்து பெறுவோம் என்று நாம் எதிர்பார்க்கும் பொருட்டு நம்பிக்கை எனும் ஆற்றல், அதாவது தேவகொடையை கொடுத்திருக்கிறார்.

4. அவநம்பிக்கை:— கடவுளில் நம்பிக்கை கொள்ளாதுவிடல்.

அதைரியம்:— கடவுளில் மேலுள்ள நம்பிக்கையை முழுதும் இழந்துவிடல்.

மிதமிஞ்சியநம்பிக்கை:— கடவுளின் தூய தன்மைக்கு முரண்படும் வகையில் அவரிடமிருந்து ஒன்றை எதிர்பார்த்தல்.

5. நம்பிக்கையால் வாழ்பவன் விண்ணக மகிழ்வை தன் உள்ளத்தில் சுவைக்கிறான். தனக்குத் தேவையானதை கடவுளிடம் கேட்கிறான். சோதனை காலத்தில் வரும் துன்ப துயரங்களை பொறுமையுடன் சகிக்கிறான். கடவுளின் அரசுக்காக போர்செய்ய முன்னணியில் நிற்கிறான். நித்திய பேரின்ப வாழ்வை கைக்கொள்ள முழுமூச்சுடன் வேலை செய்கிறான்.

**பயிற்சிகள்:—**

**கீறிட்ட இடங்களை நிரப்புக.**

1. கடவுள் நமக்கு வாக்கு அளித்தவைகள் முக்கியமாக................,.......................செலவங்களே.

2. ஒருவன் தன் கடமையின்படி கடவுள் மேல் நம்பிக்கை கொள்ளாவிட்டால்...........
........................என்னும் பாவத்தைக் கட்டிக் கொள்கிறான்.

3. நம் பாவங்களுக்கு............................
அவரது அருளையும் நித்திய............................
கடவுளிடமிருந்து நாம் முக்கியமாக எதிர்பார்க்கிறோம்.

[14ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கிறிஸ்தவ போதக...

(13ம் பக்கத் தொடர்ச்சி)

4. ''சர்வேசுரன் உங்களை விசாரிக்கிறவர் ஆகையால் அவர்மேல் உங்கள் சகல ..........................................வைத்துவிடுங்கள்'' (1 இரா. 5:7).

5. ''சர்வேசுரனால்..........................ஒன்றுமில்லை'' (லூக். 1:37).

---

**33ம் பாடம்: இறையன்பு**

இப்பாடம் க. தி. வி. 67ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார் விடைகள்:**

1. தம்முடைய ஒரே திருமகனால் நாம் வாழும்படி கடவுள் அவரை இவ்வுலகத்திற்கு அனுப்பியதின் மூலம் தமது அன்பை நமக்குக் காட்டியுள்ளார்.

2. கடவுளின் அன்பும் இரக்கமும் கிறீஸ்துவில் வெளிப்படுவதாலும், அன்பின் காரணமாக கிறிஸ்து பாவிகள்மேல் இரக்கங் கொண்டு நமக்காக சிலுவையில் தம் உயிரைக் கொடுத்து இரட்சித்ததினாலும் நாம் இயேசுநாதரை அன்பு செய்கிறோம்.

3. நாம் கடவுளை அன்புசெய்ய, நமக்கு உதவியாக, ஞானஸ்நானத்தில் பரிசுத்த ஆவியின் வழியாக இறைஅன்பு எனும் ஓர் ஆற்றலை, அதாவது தேவகொடையைக் கடவுள் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

4. நாம் கடவுளை அன்புசெய்கிறோம் என்று காட்ட நாம் அவரைப்பற்றி அடிக்கடி நினைத்தல், அவரோடு விருப்பமுடன் உரையாடல், அவருடைய பரிசுத்த விருப்பத்தை நிறைவேற்றல், அயலானை நேசித்தல் பத்து கற்பனைகளை அனுசரித்தல் என்பவற்றைச் செய்யவேண்டும்.

5. கடவுளை அன்பு செய்வதற்கு மாறான பாவங்கள்: நமது அன்பை கடவுளுக்கு நன்றியாகச் செலுத்தாதிருப்பது, அவரை வெறுப்பது, அவரை பகைப்பது என்பவையாகும்.

6. கடவுளை வெறுப்பது எல்லாப் பாவங்களிலும் மிக அருவருப்புக்குரியதாகும்.

7. கடவுளை அன்பு செய்வது, புண்ணியங்களில் தலைசிறந்ததாகையாலும், கடவுளின் அன்பு எக்காலமும் நிலைபெற்றிருக்குமாகையாலும், நாம் எல்லாவற்றிற்கும் மேலாக கடவுளை அன்பு செய்ய முற்படவேண்டும்.

**பயிற்சிகள்;-** சரி, பிழை, கூறுக.

1. அன்பில் நிலைத்திருப்பவன் இறைவனில் நிலைத்திருக்கிறான்.
2. கடவுள் நம்மை அன்பினால் உண்டாக்கினார்.
3. கடவுள் நம் சொந்தப்பெற்றோர்களுக்குக் கீழானவர்.
4. கடவுளை அன்பு செய்வது ஒரு சிறந்த புண்ணியமல்ல.
5. கடவுளை வெறுப்பது பெரியபாவம்.
6. நம் அயலானை நேசிப்பது நமது கடமை. ★

---

## "தேவ ஆலயம்..."

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வீரத்திலே வாணாளைப் போக்குகின்றோம். கூளிப்பேயும் எமது உலக பிரபுக்களின் கூத்தைப் பார்த்துக் கும்மாளம் போடுகிறது. ஆக்குவது, கட்டி எழுப்புவதுதான் கடவுளின் வேலை. முடிவு பற்றிய உரையிலே எருசலேம் ஆலயத்தின் அழிவு பற்றி இயேசு விபரிக்கிறார். (மாற் 13. 2). குருத்து ஞாயிறு தினம் அதையிட்டுக் கண்ணீர் விட்டுப் புலம்பினார். (லூக். 19. 41) பாவி மனிதரின் வேலை அது. ஆனால், அதன்பின் எழும்புவது ஞான ஆலயம்.

அக்காலத்தில் அநேக பக்தியுள்ள மனிதர் அதனை எதிர்பார்த்திருந்தனர். சாக் கடலருகிலே கண்டெடுத்த ''கும்ரூன்'' மக்களின் நூல்களிலே இவ்வித கருத்துகள் காணக் கிடக்கின்றன. உலக அரசுக்கும் ஆதாயத்துக்கும் ஆதாரமாக மாறிய ஆலயம் அழிய வேண்டியது முறையே அதைத் திருத்தி, ஆண்டவன் ஆளும் ஆன்ம ஆலயத்தை அமைப்பதே கடவுள் – மனிதன் கிறிஸ்து இயேசு செய்யவந்த வேலை. புனித சின்னப்பர் எழுதிய நிருபங்களில் இதைப் படிக்கலாம் (1 கொரி. 3. 16; 2 கொரி. 6. 16; எபே. 2. 21).

மனிதர் கையால் ஆகாத இந்த ஆலயம் எது என ஆராய்வது எமது ஆன்ம வாழ்வுக்கு அவசியம். நற்செய்தி நூல் வரைந்தவர்கள் வழிபாட்டு வேளைகளில் கிறிஸ்தவர்களின் ஆன்ம அறிவை வளர்க்கவே எழுத்தில் உதவினார்கள். அவர்கள் எல்லாவற்றையும் எழுதவுமில்லை. ஒரே மாதிரி வரையவுமில்லை. அந்த நாட்களிலே சுருக்கெழுத்து அருமை; பதிவுப் பொறியோ சூனியம். கண்டதையும்

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வேதாகமத்தைப்...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கொள்வதற்குக் கடினமானவை சில அவருடைய (சின்னப்பருடைய) கடிதங்களில் உள்ளன. அறியாதவர்களும் உறுதியற்றவர்களும் மறை நூலின் மற்றப் பகுதிகளுக்குப் பொருள் திரித்துக் கூறுவது போல, இவற்றிற்கும் கூறுகின்றனர்'' (2 இரா. 3, 16)

பழைய உடன்படிக்கையையும் புதிய உடன்படிக்கையையும் வேதாகமம் மையமாகக் கொண்டுள்ளது. கடவுளின் அரசு ஆரம்பித்ததிலிருந்து, இற்றைவரை, திருச்சபை தன் உத்தியோக பூர்வமான படிப்பினைகளுக்கு வேதாகமத்திலும் (Scripture) பாரம்பரியத்திலும் (Tradition) தங்கியிருக்கின்றது.

''இதோ கடவுள் உங்களோடு செய்யும் உடன்படிக்கையின் இரத்தம்'' என்று சீனாய் மலையடிவாரத்தில் மோயீசன் கூறினார். ''இது புதிய உடன்படிக்கையின் இரத்தம்'' என்று ஜெருசலேம் நகர சிறு வீடு ஒன்றின் மேல் மாடியில் எக்காலமும் மறக்க முடியாத வார்த்தைகளை இயேசு கூறினார். திருச்சபை தன் குரு வாயிலாக, உலகின் எல்லாப் பாகத்திலும், பலிப்பீடங்களில் இவ்வார்த்தைகளைக் கூறிக்கொண்டு வருகின்றது.

பலஸ்தீன் நாட்டு யூத மக்களை விட, கிரேக்க மொழி பேசிய யூதர்கள் (Jews in Diaspora) பெருமளவில் அலக்சாந்திரியாவைச் சார்ந்த நாடுகளில் வசித்து வந்தனர். இவர்களுக்காகவே செப்ருவாஜின்ட் (70) என்று கூறப்படும் கிரேக்க மொழி பெயர்ப்பு எபிரேய மூல மறைநூலிலிருந்து செய்யப்பட்டது. நாளாவட்டத்தில் இந்நூல்களோடு கிரேக்க மொழியில் எழுதப்பெற்ற சில நூல்களும் சேர்க்கப்பட்டன. இவ்வாறு எபிரேய வேதாகமத்திற்கும் (Hebrew Bible) கிரேக்க வேதாகமத்திற்கும் (Greek Bible) வித்தியாசம் ஏற்பட்டது.

ஆபிரகாமுடன் ஆரம்பித்த கடவுளின் மீட்புத் திட்டம், கிறிஸ்து வரும்வரை நடந்த சரித்திர வரலாற்றில் பல்வேறு இலக்கிய உடையில் பொதிந்து, பழைய ஏற்பாட்டிலுள்ள 45 புத்தகங்களில் ஓடிக்கொண்டிருக்கின்றது. கிறிஸ்துவுடன் ஆரம்பித்த புதிய நித்திய உடன்படிக்கையின் வரலாறு, புதிய ஏற்பாட்டில் உள்ள 27 புத்தகங்களில் அவ்வண்ணம் ஓடிக்கொண்டிருக்கின்றது.

எபிரேய வேதாகமத்திலுள்ள புத்தகங்களை திருச்சபையால் முன் அங்கீகரிக்கப்பெற்ற நூல்கள் (Proto-Canonical) என்றும், கிரேக்க வேதாகமத்தில் மாத்திரம் காணப்படும் புத்தகங்களை பின் அங்கீகரக்கப்பெற்ற (Deutero-Canonical) என்றும் கத்தோலிக்கர் அழைக்கிறார்கள். கத்தோலிக்கரல்லாத கிறீஸ்தவர்கள் பின் அங்கீகரிக்கப்பட்ட (Deutero Canonical) புத்தகங்களை மறைவு நூல்கள் (Apocrypha) என்று அழைக்கிறார்கள். ஆனால், இறைவனின் ஏவுதலில்லாமல் எழுந்த புத்தகங்களையே கத்தோலிக்கர் மறைவு நூல்கள் (Apocrypha) என்று அழைக்கிறார்கள். ★

## தேவ ஆலயம்...

[14ம் பக்கத் தொடர்ச்சி]

கேட்டதையும் படிப்போரின் பக்குவத்துக் கொப்பக் குறித்து கொடுத்தார்கள். எனவே தான் விபரங்களிலே வித்தியாசங்கள் காணப்படுகின்றன. விளக்கங்களிலே முரண்பாடு தானும் தோன்றுகிறது.

அருளப்பர் வரைகிறார்: ''அவர் குறிப்பிட்டதோ அவரது உடலாகிய ஆலயத்தையே. அவர் இறந்தோரிடமிருந்து உயிர்த்த பொழுது அவருடைய சீடர்கள் அவர் இவ்வாறு சொல்லியதை நினைவு கூர்ந்து, மறைநூலையும் இயேசு கூறிய வார்த்தைகளையும் விசுவசித்தனர் (அரு. 2, 21). மூன்று நாளில் என்று சொன்னதே இவ்வார்த்தைகளின் பொருளை விளங்கப் பிரதானமாயிற்று. அதனாற்றான் வேத எதிரிகள் இச்சொல் பின்னர் சேர்க்கப்பட்டது என்று வாதிக்கின்றனர். பிற்காலக் கிறிஸ்தவர்கள் இதைச் சேர்ப்பதாயின் பிழையாக ''மூன்று நாளில்'' என்றல்ல, தமக்குச் சரியாக, விசுவாச மந்திரத்திற் போல ''மூன்றாம் நாள்'' என்றே வரைந்திருப்பர். யூதர் கணிப்புப்படி மூன்று நாள், ஆனால் ரோமர் கணக்குப்படி இரண்டு நாள்தானும் முடியுமுன்பே கிறிஸ்துவின் உடல் உயிர் பெற்று வெளியேறிவிட்டதே! இந்த உடல்தான் கையினாலன்றிக் கடவுளால் எழும்பிய புதிய ஆலயம்; இங்குதான் இனி மேல் இறைவன் உறைவார்; மனிதர் கடவுளை வழிபடவருவார், என்று அறியத்தந்தார் கிறிஸ்து.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் உத்தானத்...

*[1ம் பக்கத் தொடர்ச்சி]*

வலக்கையால் உயர்த்தினார். இதற்கு நாங்கள் சாட்சிகள்'' (அ. ப. 5:30–32).

புனித இராயப்பர் நூற்றுவர் தலைவன் கொர்னேலியுவுக்கும், அவனுடைய சுற்றத்தார் நண்பர்களுக்கும் ஆற்றிய அருளுரையில் பின்வருவாறு கூறினார்: ''கடவுள் அவருக்கு (இயேசுவுக்கு) பரிசுத்த ஆவியையும் வல்லமையையும் அளித்து, அபிஷேகம் செய்தார். கடவுள் அவரோடு இருந்ததால், அலகை துன்புறுத்திய அனைவரையும் குணமாக்கி, எங்கும் அவர் நன்மை செய்துகொண்டே சென்றார்.... அவர் யூதேயா நாட்டிலும் யெருசலேமிலும் செய்தவை அனைத்திற்கும் நாங்கள் சாட்சிகள். அவரைக் கழுமரத்தில் ஏற்றிக் கொன்றுபோட்டனர். ஆனால், கடவுள் அவரை மூன்றும் நாள் உயிர்ப்பித்தார்.... இறந்தோரிடமிருந்து அவர் உயிர்த்த பின் அவரோடு உண்டும் குடித்தும் வந்த நாங்களே சாட்சிகள். வாழ்வோரையும் இறந்தோரையும் நடுத்தீர்க்கக் கடவுளால் ஏற்படுத்தப்பட்டவர் அவரே என்பதை மக்களுக்கு அறிவிக்கவும், சாட்சியம் கூறவும் கடவுள் எங்களுக்குப் பணித்தார்'' (அ. ப. 10 : 38–42).

புனித சின்னப்பர் பிசிதியா நாட்டு அந்தியோக்கியாவில் நிகழ்த்திய உரையில் பின்வருமாறு கூறினார்: ''சாவுக்குரிய குற்றம் எதுவும் காணாதிருந்தும் அவரை (இயேசுவை) தொலைக்குமாறு பிலாத்துவைக் கேட்டனர். அவரைக் குறித்து எழுதப்பட்டவை அனைத்தும் நிறைவேறியபின்னர் அவரைக் கழுமரத்திலிருந்து இறக்கி கல்லறையில் வைத்தனர். கடவுளோ அவரை இறந்தோரிடமிருந்து எழுப்பினார். அவரும் கலிலேயாவிலிருந்து தம்முடன் யெருசலேம் வந்திருந்தவர்களுக்குப் பல நாட்கள் தோன்றினார். **அவர்கள் இப்போது மக்கள்முன் அவருக்குச் சாட்சியாக நிற்கின்றனர்.** நாங்கள் உங்களுக்கு அறிவிக்கும் நற்செய்தியாவது: இயேசுவைக் கடவுள் உயிர்ப்பித்து, நம் முன்னோருக்கு அளித்த வாக்குறுதியை அவர்களுடைய மக்களாகிய நமக்கென நிறைவேற்றினார்'' (அ. ப. 13:28–32).

புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் கிறிஸ்துநாதருடைய உத்தானத்தின் முக்கியத்துவத்தைப் பின்வருமாறு விளக்கிக் கூறியுள்ளார்: ''நான் பெற்றுக்கொண்டதும் முதன்மையானதாக உங்களுக்குக் கையளித்ததும் எதுவெனில், மறைநூலில் உள்ளபடி, கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக இறந்தார். அடக்கம் செய்யப்பட்டு, மறைநூலில் உள்ளபடியே, மூன்றும் நாள் உயிர்த்தெழுந்தார். கேபாவுக்கும், பின்னர் பன்னிருவருக்கும் தோன்றினார். பின்பு, ஒரே சமயத்தில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட சகோதரர்களுக்குத் தோன்றினார் .... பின்னர் யாகப்பருக்கும், அடுத்து அப்போஸ்தலர் அனைவருக்கும் தோன்றினார். எல்லாருக்கும் கடைசியாக, காலந்தப்பிய பிறவி போன்ற எனக்கும் தோன்றினார்.... இனி, கிறிஸ்து இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார் என அறிவிக்கப்பட்டிருக்க, இறந்தோர் உயிர்ப்பதில்லை என உங்களுள் சிலர் சொல்வதெப்படி? இறந்தோர் உயிர்த்தெழுதல் இல்லையென்றால் கிறிஸ்துவும் உயிர்த்தெழவில்லை. **கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால், எங்கள் தூதுரை பொருளற்றதே, உங்கள் விசுவாசமும் பொருளற்றதே. நாங்களும் கடவுளின் சார்பில் பொய்ச்சாட்சி சொல்பவராவோம்....** ஆனால், உள்ளபடி, இறந்தோரிடமிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்; துஞ்சினோரின் முதற்கனி அவரே'' (1 கொரி. 15: 3–20).

மேற்காட்டிய சான்றுகளிலிருந்து கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அப்போஸ்தலருடைய போதனைக்கும், திருச்சபையின் விசுவாசத்திற்கும் அத்திவாரமாக அமைந்துள்ளது என்பது வெள்ளிடைமலை. இந்த உறுதியான அத்திவாரத்தின்மேல்தான் திருச்சபை கட்டி எழுப்பப்பட்டுள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த இந்த உண்மைக்காக அப்போஸ்தலர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்ததுமல்லாமல், அதற்கு இறுதிச் சான்றாக தங்கள் உயிரையுமே தியாகம் செய்தனர். ★

தேற்றாத்தீவில் புனித யூதாததேயுவின் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 23ந் திகதி கொண்டாடப்படும். அவ்வேளை புதிய ஆலயத்திற்கு அத்திவாரக் கல்லும் நாட்டப்படும்.

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S.S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1–4–72ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media